[1973 மார்ச் 11

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, நான் சொன்னது தவிட்டில் நச்சுப்பொருள் கலந்த எண்ணெய் இருக்கிறது ; அதனால் அது உடல் நலத்திற்கு ஏற்றதல்ல என்று தான். அங்கத்தினர் அவர்கள் கையால் குத்தப்பட்ட அரிசியைத் தான் உபயோகிக்க வேண்டும் என்பதல்ல. கொஞ்சம் அதிகமாக தீட்டவேண்டுமென்று சொன்னாலும், அல்லது குறைவாகத் தீட்ட வேண்டுமென்று சொன்னாலும் அதற்கேற்ற முறையில் செய்து கொடுக்க ஆலைகளில் வசதி இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, தவிட்டில் இருக்கக் கூடிய எண்ணெயில் விஷம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது நீக்கப்பட்டுவிட்டால் சத்துணவாக உபயோகிக்கலாம் அல்லவா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தவிட்டை நன்றாக சுத்தம் செய்துவிட்டால், அதில் இருக்கக்கூடிய விஷம் நீக்கப் பட்டு விடும். அப்போது அதை சத்துணவாகப் பயன்படுத்தலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சித்தர்காட்டில் உள்ள நவீன அரிசி ஆலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவித் தார்கள். பொதுவாக நமது மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நவீன அரிசி ஆலைகள் எல்லாம் எந்த நிலையில் ஓடுகின்றன என்று அறிய விரும்புகிறேன். லாபத்திலா ? நஷ்டத்திலா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கனவே இந்த அவையில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். 13 நவீன ஆலைகள் நம் மாநிலத்தில் இருக்கின்றன என்றாலும் அவை யாவும் நஷ்டத்தில்தான் ஓடுகின்றன. அவைகளை நல்லமுறையில் லாபகா மானதாக ஓட்டுவதற்கு, உணவுத் துறையினிடத்தில் ஒப்படைக் கின்ற குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் இருக்கிறது.

அரசுப் போக்குவரத்துத் துறை ஓட்டுநர்களுக்கு குடைகள் வழங்கல்

*448. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் பஸ் டிரைவர், கண்டக்டர்களுக்கு மழைக் காலங்களில், உரிய நேரத்தில் பணிக்கு வந்து போக இலவசமாக குடை வழங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

1972 மார்ச் 11]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே இலவசமாக குடை வழங்கும் திட்டம் இல்லை என்றாலும் மழைகாலங்களில் அவர்கள் சிறப்பாகப் பணிபுரிவதற்கு மழைக் கோட்டுகளையாவது வாங்கிக் கொடுத்து அவர்களிடம் இருந்து அதற்கான தொகையை மாதத் தவணைகளில் திரும்பப்பெற அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவர்களுக்கு இலவசமாகப் பயணம் செய்ய பேருந்துகள் இருக்கிற காரணத்தினால் இலவசமாக குடைகள் வழங்க வேண்டிய அவசியம் இல்லை, மழைக்கோட்டும் அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

கோயில்களின் கணக்குகள் தணிக்கை.

* 449. வினா—திரு. கே. ரங்கநாதன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறநிலையத்துறைக்கு உட்பட்ட ஆலயங்களின் வரவு செலவுக் கணக்குகள் அதிகாரிகளால் தணிக்கை செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திருவரங்கம் கோயில் வருமானம்

* 450. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவரங்கம் கோயிலின் வருமானத்தைக்கொண்டு மருத்துவமனை, கல்விச்சாலை ஏற்படுத்துவது போன்ற பொது நலப் பணிகள் எவையேனும் நடைபெறுகின்றனவா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]